முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

நிறைவேற்றுகை மனு எண். 19/2018

எ.ம..சா.1– கவிதா

18.12.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா இ,றந்த பிறகு எனக்கு அறிவிப்பு வந்தது. அறிவிப்பு பெற்ற பிறகு வழக்கு விவரங்களை தெரிந்து கொண்டீர்களா என்றால் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். என் அப்பாவின் உடன்பிறந்த செல்வாம்பாள் மற்றும் பத்மாவதி ஆகியோர் எனக்கு அத்தை என்றால் சரிதான். சென்னியப்ப கவுண்டர் என் அப்பா வழி தாத்தா என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் சண்முகம் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி என் சித்தப்பா திருமணம் செய்து கொள்ளாமல் இறந்துபோனார் என்றால் சரிதான்.

2) செல்வாம்பாள், பத்மாவதி ஆகியோர் தாவா சொத்தை பிரித்துக் கொடுக்கும்படி திருப்பூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.201/1985 தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த தாவாவில் தாவாச் சொத்தை 5 சமபாகங்களாக பிரித்து 27.2.1987ம் தேதி முதல் நிலை ஏற்பட்டு 2 பாகங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் தாத்தா சென்னியப்ப கவுண்டர் என் அப்பா பெயரில் உயில் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரிதான்.

3) என் அப்பா 01–08–2008ம் தேதி தான செட்டில்மெண்ட் பத்திரம் எனக்கு எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். எ,.ம.சா.ஆ.2 ஆவணத்தில் தாவாச் சொத்தை பொறுத்து வில்லங்க விவகாரங்கள் இல்லை என ஷரத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மனுவில் அறிவிப்பு வந்த பிறகு என் அத்தை இருவரும் சொத்துக்களைப் பொறுத்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுக் கொண்ட விவரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் இப்போது தான் தெரிந்து கொண்டேன்.

4) என் அத்தை இருவரும் முதல்நிலை தீர்ப்பாணை அடிப்படையில் இறுதி நிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து சொத்துக்களை பார்வையிட்டு அளவீடு செய்து பிரிக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றால் இப்போது தெரிந்து கொண்டேன். தாவாச் சொத்து என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என இதே நீதிமன்றத்தில் அ.வ.340/06 தாக்கல் செய்து தள்ளுபடியான விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு திருமணம் எங்கு செய்து கொடுத்தார்கள் என்றால் பூலுவபட்டியில்.

5) தாவாவில் ஏற்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை பொறுத்து என் அப்பா இறந்த பிறகு விவரங்கள் தெரிந்து கொண்ட பிறகு மேல்முறையீடு செய்துள்ளீர்களா என்றால் வழக்கறிஞரிடம் மேல்முறையீடு செய்யச் சொல்லி உள்ளேன். எப்போது மேல்முறையீடு செய்ய வழக்கறிஞரிடம் தெரிவித்தேன் என்றால் 4 மாதங்கள் இருக்கும். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 2022ம் ஆண்டு இறந்து போனார். அறிவிப்பு பெற்றுக் கொண்ட பிறகு 10 மாதங்களாக மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதன் விவரங்கள் என்ன என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

6) மேல்முறையீடு செய்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவாச் சொத்து என் தாத்தாவின் சுய சம்பாத்திய சொத்தல்ல என்றால் என் அப்பா என் தாத்தா சம்பாதித்தாக சொல்லி உள்ளார். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 3வது பத்தியில் தாவா சொத்து என் பாட்டி சம்பாதித்தாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் பாட்டி என் தாத்தாவிற்கு தாவாச் சொத்தை பொறுத்து ஆவணம் எதுவும் ஏற்படுத்தி உள்ளாரா என்றால் உயில் ஏற்படுத்தி உள்ளார்.

7) 05.07.1966ம் தேதி என் பாட்டி ஏற்படுத்தியதாக சொல்லும் உயில் சாசனத்தை என் அப்பா இதற்கு முன்பு தாக்கல் செய்த வழக்குகளில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. அசல் உயில் என்ன ஆனது என்றால் எல்.என்.டி. வங்கியில் அடமானத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிநிலை தீர்ப்பாணையின்படி தாவாச் சொத்தில்

என் அப்பாவிற்கு 3 ல் 1 பாகம் பாத்தியம் என்றால் தெரியாது. எந்த வருடம் எனக்கு திருமணமானது என்றால் 1991 ம் ஆண்டு திருமணமானது. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து திருமணமான 5, 6 மாதங்களில் என் அப்பா வீட்டுக்கு வந்துவிட்டதாக கூறுகிறார்.

8) என் அப்பாவுடன் வசித்து வந்ததால் நீதிமன்ற மனுக்கள் நீதிமன்றத்தில் இருந்து சார்வு செய்யப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. தாவாச் சொத்துக்களை இறுதி நிலை தீர்ப்பாணையின் போது நீதிமன்ற ஆணையர் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் அளவீடு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சென்னியப்ப கவுண்டரின் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவருக்கு யாரார் வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) தாவாச் சொத்து பொறுத்து 7 வருடங்களுக்கு இறுதிநிலை தீர்ப்பாணையின்படி என் அப்பாவிற்கும் அவருடைய சகோதர சகோதரிகளுக்கும் சட்டப்படி பாகம் ஏற்பட்டுள்ளது அதை நான் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாணையின்படி மனுதாரர்கள் அவர்களுக்குரிய பாகத்தை சுவாதீனம் எடுக்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்கள். மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.